# ஆற்றுப்படையில் உணவுசார் புழங்குபொருள்

ம. சுகன்யா
பகுதிநேர முனைவர் பட்டஆய்வாளர்
அரசுகலைக்கல்லூரி, (தன்னாட்சி)
கோயம்புத்தூர்

புழங்குபொருட்கள் என்பவை மனித வாழ்வோடு மிக நெருங்கிய தொடர்புடையவை. நம் உணர்வுகள் வாழும் களமாகப் புழங்குபொருட்கள் விளங்குகின்றன. “நம்மைச் சுற்றியுள்ள புற உலகம் முழுவதும் பொருள் சார்ந்துதான். நாம் பொருளோடு உறவாடாத நேரம் கிடையாது. ‘பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை’ என்பது முன்னிலை பெற்றுவிட்டது. நம்மோடு தொடர்புடைய எண்ணற்ற பொருள்களுள் ‘புழங்குபொருட்கள்’ முக்கிய பங்குவகிக்கின்றன. நம் உணர்வுகள் வாழும் களமாக இப்புழங்குபொருட்கள் உள்ளன. தற்காலத்தில் இப்புழங்கு பொருட்களை காலமாற்றத்திற்கேற்ப புழங்குபொருட்களை மாற்றி வடிவமைத்துக் கொள்கிறோம்.

## புழங்குபொருள் குறித்து அகராதிகளின் விளக்கங்கள்

புழங்குதல் என்பதற்குக் கழகத்தமிழ் அகராதி கையாளுதல், வழங்குதல்[1] என்றும் மெய்யப்பன் தமிழகராதி பழகுதல் என்றும்[2] நர்மதாவின் தமிழகராதி உபயோகித்தில் இருத்தல், பயன்கருதி கையாளப்படுதல்[3] என்றும் செந்தமிழச் சொற்பிறப்பியல் பேரகராதி (தாசு,சொல் முதலியன) வழக்கில் இருக்கும் நிலை[4] என்றும் தமிழ் லெக்ஸிகன் கையாளுதல்[5] என்றும் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (நாணயம், சொல் முதலியவை) உபயோகத்தில் அல்லது வழக்கில் இருக்கும் நிலை, பயன்பாடு[6] என்றும் அகராதிகள் சொல்லுக்கான விளக்கங்களைத் தருகின்றன.

## புழங்குபொருள் குறித்துஅறிஞர்களின் கருத்துகள்

‘பெரும்பாலும் அறிஞர்கள் புழங்குபொருள் பண்பாட்டை என்றும், இரண்டு உட்பிரிவுகளாகக் காண்கின்றனர். இந்த இரண்டுநிலைகளில் புழங்கு பொருட்களை வகைப்படுத்துவதற்கு ஒரு முக்கியக் கருத்தமைவை ஆய்வாளர்கள் முன்வைக்கக்கூடும்”[7] என்று ஹென்றி கிளாசி குறிப்பிடுகிறார். இக்கருத்திலிருந்து கலைப்பொருள்கள் மற்றும் கைவினைப் பொருள்கள் புழங்குபொருளினைச் சார்ந்து அமைவதைக் காணலாம்.

இயற்கையிலிருந்து இயற்கைப்பொருள்கள் புழங்குபொருள்களாக உருவாக்கம் பெற்று, பண்பாட்டு மதிப்பைப் பெறுகிறபோது புழங்குபொருள்கள் குறித்த சிந்தனைகள் முழுமை பெறுவதாக கருதுதலாம். “மானுடச் சமூகங்கள் எல்லாம் தாம் வாழும் சுற்றுச் சூழலுக்கும் ஏற்பவாழ்ந்தாக வேண்டும். இந்தப் படிமுறையில் சமூகங்கள் தத்தம் சொந்த நோக்கத்திற்கேற்ப இயற்கை உலகை வடிவமைக்கப் பல்வேறு தந்திரோபாயங்களையும், அணுகுமுறைகளையும் வளர்த்தெடுத்துள்ளன.”[8] இக்கருத்திலிருந்து இயற்கை வளங்களைப் பண்பாட்டுப் படைப்புக்களாகவும், கலைப்படைப்பாகவும் மாற்றிக் கொள்வதையே புழங்குபொருள் பண்பாடு என்று தெளியலாகிறது.

புழங்குபொருளில் காலத்திற்கேற்ப பண்பாட்டு மதிப்புக்கள் தொடர்பு பெறுகின்றன. புழங்குபொருளும், பண்பாடும் பிரித்தறிய முடியாதவை. இவை ஒருநாணயத்தின் இரு பக்கங்கள் என்று மதிப்பிடலாம். பண்பாட்டின் கண்ணாடி புழங்குபொருள் என்று கூறலாம். “பொருள் பற்றிய பண்பாடு என்பதைக் குறிப்பன கருவிகள், ஆயுதங்கள், அணிகள், ஆடைகள் போன்றவை”[9] எனக் குறிப்பிடுவர். “மக்கள் அவர்களின் தேவைகளுக்காகச் செய்துகொள்ளும் அனைத்து வகையான பொருள்களும் பொருள்சார் பண்பாட்டில் அடங்கும். இயந்திரங்கள், கருவிகள், மரச்சாமன்கள், வீட்டுப் பொருள்கள், உடைகள், அணிகலன்கள், கட்டடங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், சாலைகள், வேளாண் நிலங்கள், எழுதுகோல், அழகுப்பொருள்கள் எல்லாம் பொருள்சார் பண்பாட்டைச் சேர்ந்தவை”[10] என்பர்.

புழங்கு பொருள்கள் எவையெவை என்பது குறித்ததொரு விரிவான செய்திகள் வளர்ந்து கொண்டேவருவதை நடைமுறையில் காணலாம். இல்லம்சார் புழங்குபொருள்களில் ஆணுக்கு உரியவை, பெண்ணிற்கு உரியவை எனப்பாகுபடுத்த வழியுண்டு. இருவருக்கும் பொதுவாகபயன்படக்கூடியவை எனக்கருத்தில் கொள்ளவும் இயலும்.

மனிதன் தோற்றமுற்ற காலத்திலிருந்து இன்றுவரை சேமித்து வைக்கும் பழக்கவழக்கங்கள் நம் தமிழர்களிடையே உண்டு. பிறநாட்டவரும் அறிவர். பண்டையத் தமிழ் மக்கள் உணவுப்பொருள்களைச் சேமித்து வைக்க மண்பாண்டங்கள் செய்துகொண்டனர். பொதுவாக மண்பாண்டங்கள் தண்ணீர், உணவுப்பொருள்கள் முதலியவற்றைச் சேமித்து வைக்கவும், உணவு சமைக்கவும், சாப்பிடவும் உதவும் புழங்குபொருளாகக் அக்காலத்தில் வாழ்ந்த பழந்தமிழர்கள் பயன்படுத்தியுள்ளனர் என்பதைச் இலக்கியச் சான்றுகள் வாயிலாக அவதானிக்க முடிகிறது. பழந்தமிழர் வாழ்வியலில் சுடப்படாத மண்பாண்டங்களைக் காட்டிலும், சுடப்பெறும் மண்பாண்டங்கள் நீடித்திருக்கும் என்ற கருத்துச் சிந்தனை இருந்துள்ளமையை,

**"சலத்தாற் பொருள் செய்தேமார்த்தல் பசுமண்**
**கலத்துணீர் பெய்திரீஇ யற்று"**[11]

என்ற குறளின் பொருண்மையானது, 'பசு மண்ணாற் குடஞ்செய்துநீர் நிறையப் பெய்து வைத்தால் அது ஊறி குடத்தையுடைத்து நீர் எப்படி வெளியேறி ஓடுமோ அதுபோல கொடுமையால் பெற்ற பொருளும் கெடும்'[12] எனவே மட்பாண்டங்களைச் சுட்டுப் பயன்படுத்தவேண்டும் என்ற சிந்தனை உடையவர்களாகப் பண்டைத் தமிழர் விளங்கியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

**குழிசி (பானை)**

'குழிசி' என்பதற்குப் பானை என்று பொருள்.[13] "தடாவும், குழிசியும், மிடாவும் பானை"[14] என்று பானையின் பெயர்களைச் சேந்தன்திவாகரம் குறிப்பிடுகின்றது. இவற்றுள் 'குழிசி'என்னும் பெயர் சங்க இலக்கியத்தில் மிகுதியாகப் பயின்றுவந்துள்ளது. 'குழிசி' என்றால் பள்ளம் என்று பொருள். எனவே குழிவான அமைப்புக் கொண்ட பானை குழிசி என்றுபெயர்பெற்றுள்ளது. உணவு சமைப்பதற்கு இதனைமிகுதியாகப் பயன்படுத்தியுள்ளனர்.

விளம்பு உடைந்து போன வாயினையுடைய குழிசியில் கிணற்றுநீரை முகர்ந்து உலையாக அடுப்பில் ஏற்றியுள்ளனர் என்பதனை,

**"........நெடுங்கிணற்று**
**வல்லூற்றவரிதோண்டிதொல்லை**
**முரவுவாய் குழிசி முரிபடுப் பேற்றி"**[15]

என்னும் பெரும்பாணாற்றுப்படை பாடலடிகள் உணர்த்துகின்றன.

உழவேற்ட புதியோருடைய மிக்கபசிதீரும்படி சோற்றையாக்கும் குழிசி அசையும்படி அடுப்பேற்றியதை,

**"சோறடுகுழிசி இளகவிழூஉம்"**[16]

என்றபாடல் வரிகளில் சமைப்பதற்குக் குழிசியைப் பயன்படுத்தியுள்ளமையை தெளியலாகிறது.

**மிடா**

மிடா, பழங்காலத்தில் ஊர்த்தலைவரைத் தேர்ந்தெடுக்கும் குடமாகவும்,குழிசியைப் பயன்படுத்தியுள்ளனர். இக்குழிசிக் குறித்து உரையாசிரியர் ஔவை துரைசாமிப்பிள்ளை 'மிடா' (குழிசி–மிடா) என்று விளக்கம் தருகிறார்.[17]

பழங்காலத் தமிழர் சோறு சமைப்பதற்கு மிடா பயன்படுத்தியுள்ளனர். சோறுசமைப்பதற்குப் பயன்பட்ட பெரியபானையை மிடா என்றும், மடா என்றும் வழங்கியிருந்துள்ளமையை அறிய முடிகிறது.

**"காடிவைத்தகலனுடை மூக்கின்"**[18]

என்னும் பாடல் வரி மூலம் அறியமுடிகிறது. காடி வைக்கப்பட்ட மிடா வினையுடைய மூக்கணை மீது, என்று நாடகமகளிரின் முழவுக்குக் காடி உவமையாகக் கூறப்பட்டுள்ளது. எனவே மேற்பக்கம்

கழுத்துப்போன்று நீண்டும், அடிப்புறம் 'முழவு' போன்ற அமைப்பும் கொண்ட வடிவினது 'காடி' எனக்கருதலாகிறது. இக்காடியில் ஊறுகாய் வைத்திருந்தமையை,

**"நெடுமரக் கொக்கின் நறுவடிவிதிர்த்த**

**தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவீர்"**[19]

என்னும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. எனவே புளிப்புத் தன்மையுடைய காடியை''காடி வைத்தகலன்'' என்றழைத்தமையை அறிய முடிகிறது.

**தசும்பு**

'தசும்பு'என்பதற்குக்குடம் என்றுபொருள் தருகிறது தமிழ் லெக்சிகன்.[20]

**"இடங்கன்,தசும்பு,கடம்,கும்பம் குடம்**

**கன்னல் என்றுகருதுவர் புலவர்"**[21]

எனக்குடத்தின் பெயர்களில் ஒன்றாகத் தசும்பபைச் சுட்டுகின்றது.
மேலும், திவாகரம்

உணவுசமைக்கவும்,தேறல் பெய்துவைக்கவும் தசும்பைபயன்படுத்தியுள்ளனர் என்பதை,

**"வளஞ்செய் வினைஞர் வல்சிநல்கத்**

**துளங்குதசும்புவாக்கியபசும் பொதித்ததேறல்**

**இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கள் தொறும் பெறுகுவீர்"**[22]

இங்ஙனம் தசும்பு, பால், தயிர், கள் ஆகியவற்றை நிறைத்து வைத்துக் கொள்வதற்கும் பயன்பெற்றுள்ளமையை தெளியலாகிறது.

**சாடி**

இது ஒருவகை மண்பாண்டமாகும். பண்டையக் காலமக்கள் கள்ளை நிறம்பி வைத்துக் கொள்ளப் பயன்படும் பண்டமாகச் சாடியைப் பயன்படுத்தியுள்ளனர். கள்ளினைக் காய்ச்சுவதற்கும், அதனைப் பதப்படுத்தி எடுத்துவைப்பதற்கும் இச்சாடிபயன்பட்டுள்ளது.

**"நன்மரம் குழீஇயநனைமுதிர் சாடிப்**

**பன்னாள் அரித்தகோஒ யுடைப்பின"**[23]

**"வல்வாய்ச் சாடியின் வழைச்சுற விளைந்த"**[24]

என்னும் பாடல்களில் வலிய வாயினையுடைய சாடியின் கண்ணே இளமையறும்படி முற்றின கள் என்று, கள்வைக்கப்பெறும் சாடிகுறிக்கப்பெறுகின்றது.

**அகல்**

தமிழ் லெக்சிகன் 'அகல்'என்பதற்கு'சட்டி'என்று அளிக்கின்றது. இவ்வகல் என்றும் சொல் விசாலித்தல் (அ) விருத்தியடைதல் என்னும் பொருளினைத் தருகின்றது.[25] அகல் என்றால் 'விரிவு' என்று பொருள். எனவே அகன்றவாயினையும், கீழ்ப்பகுதி தரையில் வைக்கும்படியான அமைப்பினையும் கொண்டகலன் 'அகல்' எனப்பெயர் பெற்றுள்ளது.

அப்பம் விற்கும் வணிகர் கரியஅகலில் பாகொடு கூட்டிச் செய்த நூல் போல் கிடக்கும் இடியாப்பத்தைப் பாலிலிட்டுவைப்பர்

**"காரகாற் கூவியர் பாகொடுபிடித்த**

**இழைசூழ் வட்டம் பால்கலந் தவைபோல்"**[26]

என்னும் பாடல் வரிகளில் அகல் உணவு சமைப்பதற்கும், சமைத்ததை வைத்து உண்ணுவதற்கும் கலமாகப் பயன்படுத்தியமையை உணரமுடிகிறது.

**உரல்**

உரல் என்பது தானியவகைகளைக் குற்றி அரிசியாக்குவதற்கும் பயன்படுத்தியுள்ளனர் பழந்தமிழர். தரையில் குழியைத் தோண்டிஅதனுள் புல்லரிசியைப் போட்டுக் குற்றியதை,

**“நீழன் முன்றினிலவுரற் பெய்து”**[27]

இங்ஙனம் பொரும்பாணாற்றுப்படை, சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் உணவின் பொருட்டு உரல் பயன்படுத்தியுள்ளமை மேற்கண்ட பாடல் வரிகளின் மூலம் உணர்த்துவதை அறியமுடிகிறது.

**உலக்கை**

தானியவகைகளை உரலில் இட்டுக் குற்றுவதற்கு உலக்கையைப் பயன்படுத்தியுள்ளனர். இவ்வுலக்கைவயிரம் பாய்ந்ததாகவும், கருமைநிறத்துடனும் இருந்தமையை,

**“இருங்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த”**[28]

என்றபாடல் வரிகள் உலக்கைபயன்பாடுகுறித்துவிளக்கம் தருகின்றது.

**மத்து**

ஆயர் மகளிரால் தயிர் கடைவதற்குப் பயன்படுத்தியபுழங்குபொருள் மத்தாகும். கயிற்றால் வலித்துக் கட்டியமத்தினைக் கொண்டுஉறையிட்டு இறுகியதயிரைக் கடைந்துள்ளனர்.

**“புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி”**[29]

இங்ஙனம் மத்தினை பழந்தமிழர்கள் பயன்படுத்தியமையை உணர்த்துகிறது. இன்றும் கிரமப்புறங்களில் மத்து பயன்படுத்தப்படுகிறது.

ஆற்றுப்படையில் குழிசி, மிடா, தசும்பு, சாடி, அகல், உரல், உலக்கை, மத்து, போன்ற உணவுசார் புழங்குபொருள் பண்பாடு குறித்து மேற்கண்ட செய்திகள் வாயிலாக அறியமுடிகிறது.

**சான்றென்விளக்கம்**

1. கழகத் தமிழ் அகராதி, ப.641.
2. மெய்யப்பன் தமிழகராதி, ப.781.
3. நர்மதாவின் தமிழகராதி, ப.670.
4. செந்தமிழச் சொற்பிறப்பியல் பேரகராதி, ப.274.
5. தமிழ் லெக்ஸிகன், ப. 2792.
6. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.751.
7. பக்த்வச்சலபாரதி, சீ. தமிழர் மானிடவியல், ப.309.
8. மேலது, ப.310.
9. லூர்து, தே. நாட்டார் வழக்காற்றியல் சிலஅடிப்படைகள், ப.357.
10. கலைக்களஞ்சியம், (தொகு-6),ப.691.
11. பக்த்வச்சலபாரதி, சீ. தமிழர் மானிடவியல், ப.167.
12. குறள்.எண்.600.
13. தமிழ் லெக்சிகன், (தொகு-3), ப.1715.
14. திவாகரமுனிவர்,சேந்தன் திவாகரம், ப.161.
15. பெரும்.97-99.
16. மேலது, பா.366.
17. துரைசாமிப்பிள்ளை ஔவை. சு (வி.உ) புறநானூறு, ப.428.
18. பெரும்.57.
19. மேலது, ப.309-310.
20. தமிழ் லெக்சிகன், (தொகு -3), ப.1715.
21. திவாகரமுனிவர்,சேந்தன் திவாகரம், ப.161.
22. மலை. 462-464.
23. அகம்.166:1-2)
24. பெரும்.280.
25. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், (தொ-1),ப.2.
26. பெரும்.377-378.
27. பெரும்.96.
28. சிறுபான்.67.
29. பெரும்.156.